(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 4(10).]

# பாராளுமன்றம்

## 4 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2021 செப்தெம்பர் 22 புதன்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2021 ஒக்டோபர் 04, திங்கட்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

835/2020

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையில் நடாத்திச் செல்லப்படும் ஏற்றுமதிச் செயற்பாட்டு வலயங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி ஒவ்வொரு ஏற்றுமதிச் செயற்பாட்டு வலயமும் —

(i) ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) கொண்டுள்ள நிலப் பரப்பு எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி நிலப்பரப்பில் இதுவரை பயன்படுத்தப்பட்டுள்ள நிலப்பரப்பு எவ்வளவென்பதையும்;

வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) எதிர்காலத்தில் நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ள ஏற்றுமதி தயாரிப்பு வலயங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்குத் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

40/2020

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சர் மற்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய சுவடிக் கூடத் திணைக்களத்தினால் திரைப்படங்களை பேணிப் பாதுகாப்பதற்கு ஏதேனும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், இதுவரையில் பேணிப் பாதுகாக்கப்பட்டுள்ள திரைப்படங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தேசிய சுவடிக் கூடத் திணைக்களத்தில் திரைப்படங்களைப் பேணிப் பாதுகாக்கும் பிரிவின் அலுவலர்களுக்கு திரைப்படங்களை பேணிப் பாதுகாப்பது தொடர்பில் வெளிநாட்டுப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், வெளிநாட்டுப் பயிற்சிக்கென அனுப்பப்படும் நாடுகள் மற்றும் நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iii) கடந்த காலப்பகுதியில் வெளிநாட்டுப் பயிற்சிகள் வழங்கப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

584/2020

கௌரவ வேலு குமார்,— பிரதம அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் பெருந்தோட்டத்துறை சார்ந்ததாக தோட்ட மருத்துவ நிலையங்கள் நடைமுறையில் உள்ளன என்பதையும்;

(ii) அத்தகைய ஒரு நிலையத்தின் பொறுப்பாளராக, தோட்ட மருத்துவ உதவியாளர் பதவியை வகிக்குமொருவர் கடமையாற்றுகின்றார் என்பதையும்;

(iii) நோயாளர்களை பரிசீலித்து ஔடதங்களை நியமித்தல், குறிப்பிட்ட தோட்ட மருத்துவ உதவியாளரால் மேற்கொள்ளப்படுகிறது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) பெருந்தோட்டத்துறை சார்ந்ததாக தற்போது இயங்கிவரும் தோட்ட மருத்துவ நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி வைத்தியசாலைகளில் பணியாற்றும் தோட்ட மருத்துவ உதவியாளர்களின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி தோட்ட மருத்துவ உதவியாளர்களின் தகைமைகள் யாவை;

(iv) அவர்களது விடயப்பொறுப்புக்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி தோட்ட மருத்துவ உதவியாளர்களினால் மேற்கொள்ளப்படும் விடயப்பொறுப்பு சட்டரீதியானதா;

(ii) இன்றேல், இது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1018/2020

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன,— பிரதம அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை அப்போது காணப்பட்ட மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சுப் பொறுப்பை வகித்த அமைச்சர்/ அமைச்சர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி அமைச்சின் கீழ் காணப்பட்ட நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம், மேற்படி அமைச்சின் கீழ் காணப்பட்டதா என்பதையும்;

(iv) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை மேற்படி நிறுவனத்துக்குப் பொறுப்பாகவிருந்த தவிசாளர் / தவிசாளர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நிறுவனத்திற்கு பொறித்தொகுதிகளை கொள்வனவு செய்கையில் கொள்வனவு நடைமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) கொள்வனவு நடைமுறைகள் பின்பற்றப்படாது 670 மில்லியன் ரூபா பெறுமதியான பொறித்தொகுதிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) மேற்படி கொள்வனவின் போது ஏதேனும் முறைகேடு இடம்பெற்றிருப்பின், அந்த முறைகேடு யாதென்பதையும்;

(iv) அதற்குப் பொறுப்புக்கூற வேண்டிய ஆட்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(v) அது தொடர்பாக முறையான விசாரணை நடாத்தப்பட்டு குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

669/2020

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முன்மொழியப்பட்டுள்ள கும்புக்கன் ஓயா நீர்ப்பாசன கருத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கும் திகதி யாதென்பதையும்;

(ii) அதன் மதிப்பீட்டுச் செலவினம் எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி நீர்ப்பாசன கருத்திட்டத்திற்காக செலவாகும் தொகையினை பெற்றுக்கொள்ளும் முறை யாதென்பதையும்;

(iv) மேற்படி நீர்ப்பாசன கருத்திட்டத்தினை நிறைவு செய்வதற்கு எவ்வளவு காலம் செல்லும் என்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் பயன்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

979/2020

கௌரவ வேலு குமார்,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) விக்டோரியா மின் உற்பத்தி நிலைய நிர்மாணக் கருத்திட்டத்தில் பணியாற்றிய வெளிநாட்டவர்களுக்கு குண்டசாலை பிரதேச செயலகப் பிரிவின் “திகன விலேஜ்”இல் தங்குமிட வசதிகள் வழங்கப்பட்டிருந்தன என்பதையும்;

(ii) அங்கு அலுவலகக் கட்டிடங்கள், உணவகங்கள் மற்றும் தங்குமிட விடுதிகள் போன்றவை உள்ளன என்பதையும்;

(iii) இன்றளவில் அது இலங்கை மகாவலி அதிகாரசபையினால் நிர்வகிக்கப்படுகின்றது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) “திகன விலேஜ்”இல் காணப்படும் அலுவலகக் கட்டிடங்கள், உணவகங்கள் மற்றும் தங்குமிட விடுதிகளின் எண்ணிக்கையும்;

(ii) அவை இன்றளவில் பயன்படுத்தப்படுவதன் நோக்கங்களும்;

தனித் தனியாக யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) “திகன விலேஜ்”இல் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஒரு கட்டிடம் தனியார் தரப்புக்கு / நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அது எந்த அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) குறித்த கட்டிடம் வழங்கப்பட்டுள்ள தனியார் தரப்பின் / நிறுவனத்தின் பெயர் யாது என்பதையும்;

(iv) அந்தப் பிரதேசத்தில் சட்டவிரோத குடியமர்த்தல்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளனவா என்பதையும்;

(v) அவ்வாறாயின், அதற்கெதிராக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

154/2020

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு 15 இல் அமைந்துள்ள புனித அந்தோனியார் மகளிர் மகா வித்தியாலயத்தில் வர்த்தகப் பட்டதாரி ஆசிரியர் பதவியொன்றிலும் ஆங்கிலம், உரோமன் கத்தோலிக்கம், சித்திரம் மற்றும் தமிழ்மொழி ஆகிய பாடங்களில் தலா ஒரு ஆசிரியர் பதவியிலும் வெற்றிடங்கள் காணப்படுகின்றன என்பதையும்;

(ii) மேற்படி வித்தியாலயத்தில் கல்விசாரா பதவியணியிலும் அலுவலக உதவியாளர், நூலக உதவியாளர், தொழிலாளர் மற்றும் காவலாளி ஆகிய பதவிகளில் தலா ஒரு வெற்றிடம் வீதம் காணப்படுகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்காக அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

786/2020

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாணவர் ஆலோசனை ஆசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரர்களின் மொத்த எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அப்பரீட்சையில் சித்தியெய்தவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) அப்பரீட்சையில் சித்தியெய்தவர்களுக்கு இதுவரை நியமனங்கள் வழங்கப்படவில்லையென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், மேற்படி பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு துரிதமாக நியமனங்களை வழங்குவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

300/2020

கௌரவ எஸ். எம். மரிக்கார்,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கடுவலை நகரத்தில் காணப்படுகின்ற அதிக வாகன நெரிசலைக் குறைப்பதற்கென அரசாங்கத்தினால் ஏதேனும் வேலைத்திட்டம் முன்மொழியப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி வேலைத்திட்டம் யாதென்பதையும்;

(iii) மேற்படி வேலைத்திட்டம் எப்போது நடைமுறைப்படுத்தப்படும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

553/2020

கௌரவ அஸோக அபேசிங்ஹ,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) குருணாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள தேசிய வீதிகள், மாகாண வீதிகள் மற்றும் கிராமிய வீதிகளின் நீளம் பிரதேச செயலகப் பிரிவுகளின் அடிப்படையில் தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி வீதிகளில் —

(i) காபட் இடப்பட்ட வீதிகளின் நீளம்;

(ii) தார் இடப்பட்ட வீதிகளின் நீளம்;

(iii) காபட் அல்லது தார் இடப்படாத வீதிகளின் நீளம்;

எவ்வளவு என்பதையும் தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி (அ) இல் குறிப்பிட்ட கிராமிய வீதிகளின் நீளம் தனித்தனியாக உள்ளூராட்சி மன்றங்களின் அடிப்படையில் எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி கிராமிய வீதிகளைப் புனரமைப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

601/2020

கௌரவ உதயன கிரிந்திகொட,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) மத்திய அதிவேக நெடுஞ்சாலை —

(i) கருத்திட்டத்தின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

(ii) கருத்திட்டத்திற்கு இன்றளவில் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்;

(iii) கருத்திட்டத்தை நிறைவு செய்வதற்கு செலவிடப்பட வேண்டியுள்ள எஞ்சிய தொகை எவ்வளவென்பதையும்;

(iv) கருத்திட்டத்தை நிறைவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த திகதி யாதென்பதையும்;

(v) கருத்திட்டத்திற்கு ஏற்புடையதாக கடந்த ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட முறைகேடுகள்/ தாமதங்கள் காரணமாக அதனை நிறைவுசெய்ய முடியுமென உத்தேசிக்கப்படுகின்ற திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இக்கருத்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் —

(i) ஒப்படைக்கப்பட்டுள்ள கம்பனிகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) தாமதம் இடம்பெற்றுள்ள கம்பனிகளுக்கு அதன் நிர்மாணப் பணிகள் மீள வழங்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இக்கருத்திட்டத்தின் கண்டி நகருக்கு அண்மித்த இறுதி நுழைவு காணப்படுகின்ற பிரதேசம் யாதென்பதையும்;

(ii) கண்டியிலிருந்து கலகெதர வரையான வீதியில் காணப்படுகின்ற கடுமையான வாகன நெரிசல் காரணமாக அதன் ஊடாக அதிவேக நெடுஞ்சாலைக்குள் பிரவேசிப்பதற்கு 30-45 நிமிடங்கள் வரை எடுப்பதால் கண்டி பிரதேச மக்களுக்கு இலகுவாக அதிவேக நெடுஞ்சாலைக்கு பிரவேசிப்பதற்கு நுழைவு வீதி அமைக்கப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி அதிவேக நெடுஞ்சாலை நுழைவுகள் நிர்மாணிக்கப்படும் பிரதேசங்கள் யாவை என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1017/2020

கௌரவ பிரேமலால் ஜயசேகர,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தில் 'ஐ- ரோட்' கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி மாவட்டத்தில் மேற்குறித்த கருத்திட்டத்தின் மூலம் காபட் இட்டு அபிவிருத்தி செய்வதற்கு அங்கீகாரமளிக்கப்பட்ட வீதிகளின் நீளம் எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் உடன்படிக்கை கைச்சாத்திட்டுள்ள ஒப்பந்தக்காரர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி ஒவ்வொரு ஒப்பந்தக்காரரும் அபிவிருத்தி செய்வதற்காக உடன்படிக்கை கைச்சாத்திட்டுள்ள வீதிகளின் பெயர்கள் மற்றும் அவற்றின் நீளம்;

(ii) மேற்படி வீதிகளில் இன்றளவில் அபிவிருத்தி நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டு மக்கள் உடைமைக்கு கையளிக்கப்பட்டுள்ள வீதிகளின் பெயர்கள் மற்றும் அவற்றின் நீளம்;

(iii) இன்றளவில் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்படாதுள்ள வீதிகளின் பெயர்கள் மற்றும் அவற்றின் நீளம்;

என்னவென்பதை வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்படாத வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

730/2020

கௌரவ அமரகீர்த்தி அத்துகோரள,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இலங்கையில் —

(i) வருடாந்த நன்னீர் மீன் உற்பத்தி மற்றும் தேவை யாது என்பதையும்;

(ii) ஆகக்கூடிய நன்னீர் மீன் அறுவடையைப் பெற்றுத்தரும் மாவட்டம் யாது என்பதையும்;

(iii) நன்னீர் மீன்பிடிக் கைத்தொழிலில் ஈடுபடும் மொத்தக் குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) பொலன்னறுவை மாவட்டத்தில் —

(i) நன்னீர் மீன்பிடிக் கைத்தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மாதாந்த நன்னீர் மீன் அறுவடை எவ்வளவு என்பதையும்;

(iii) நன்னீர் மீன்பிடிக் கைத்தொழில் மேற்கொள்ளப்படுகின்ற குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்களில் விடப்பட்ட மீன் குஞ்சுகளின் அளவு தனித்தனியாக யாது என்பதையும்;

(ii) அக்காலப்பகுதியில், மேற்படி குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்களிலிருந்து பெறப்பட்ட மீன் அறுவடை தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) விடப்பட்ட மீன் குஞ்சுகளுக்கு ஒப்பீட்டு ரீதியாக பெறப்பட்ட மீன் அறுவடை தொடர்பில் திருப்தி அடைவாரா என்பதையும்;

(iv) இன்றேல், அதற்கான காரணம் யாது என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) சிறிய குளங்களைச் சார்ந்து நன்னீர் மீன்பிடிக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் மேலும் இச்சபையில் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

143/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— மின்சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மின்சார சபை கடன் பெற்றுக்கொண்டுள்ள அரசாங்க நிறுவனங்கள் மற்றும் வங்கிகளின் பெயர்கள் யாவை;

(ii) 2015 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் இலங்கை மின்சார சபையானது மேற்படி நிறுவனங்கள் மற்றும் வங்கிகளுக்கு செலுத்த வேண்டியுள்ள கடன் தொகை வெவ்வேறாக யாது;

(iii) இலங்கை மின்சார சபையினை நிதிரீதியில் பலப்படுத்துவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

272/2020

கௌரவ புத்திக பத்திறண,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை தேசிய கூட்டுறவுச் சபை இயங்கி வருகின்ற கட்டிடத்தில் 2017 ஆம் ஆண்டில் உள்ளக திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) அதன்போது பெறுகைச் செயன்முறையினை மீறி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதையும்;

(iii) அதன் காரணமாக பாரிய நிதி ரீதியான நட்டம் ஏற்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி திருத்த நடவடிக்கைகளுக்காக கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நிறுவனமும் சமர்ப்பித்துள்ள கேள்விப்பத்திரங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iv) குறித்த டென்டர் வழங்கப்பட்ட நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்;

(v) மேற்படி நிறுவனத்திற்கு குறித்த டென்டர் வழங்கப்பட்டமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி டென்டர் வழங்கப்பட்ட நிறுவனத்தின் பதவியணியைச் சேர்ந்த உறுப்பினரொருவருக்கும் இலங்கை தேசிய கூட்டுறவுச் சபையின் போக்குவரத்துப் பிரிவில் எழுதுவினைஞராக கடமையாற்றும் ஒருவருக்கும் இடையில் உறவுமுறைத் தொடர்பு உள்ளதென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) இல்லையெனில், அது தொடர்பில் விசாரணை நடத்தப்படுமா என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

42/2020

கௌரவ ஹேஷா விதானகே,— அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரிடம் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தில் மாகாண சபைக்குரியதான பாதைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவற்றின் மொத்த நீளம் எத்தனை கிலோ மீற்றர்கள் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கடந்த அரசாங்கத்தின் மாகாண சபை நிதி ஒதுக்கீட்டின் மூலம் அபிவிருத்தி செய்யப்பட்ட பாதைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) அதற்கென செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iii) தற்போதைக்கு சேதமடைந்த நிலையிலுள்ள மாகாண சபைக்குரிய பாதைகளின் அபிவிருத்தியை மேற்கொள்வதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

139/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(3)

(அ) “சுபீட்சத்தின் நோக்கு” கொள்கைப் பிரகடனத்தின் கீழ் தொழில் வாய்ப்பற்ற பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்பினை வழங்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) தொழில் வாய்ப்பற்ற பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்புகளை வழங்குவது தொடர்பில் பின்பற்றப்பட்ட நடவடிக்கை முறைகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இற்றைவரை தொழில் வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ள பட்டதாரிகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) அவர்கள் பணியாற்றும் தொழில் நிலையங்கள் யாவையென்பதையும்;

(iv) அவர்களின் கடமைப்பணிகளின் தன்மை யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

580/2020

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரிடம் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் உள்ள ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுக்கும் ஒரு பிரதேச சபை வீதம் நிறுவப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) இற்றைவரை பிரதேச சபையொன்று நிறுவப்படாத மன்னார் மாவட்டத்தின் மடு, முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான், கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டத்தின் வெற்றிலைக்கேணி ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு பிரதேச சபைகளை நிறுவுமாறு தொடர்ச்சியாக கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும் இற்றைவரை இக்கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை என்பதையும்;

(iii) மடு பிரதேச செயலகப் பிரிவில் உள்ள சின்னவலயங்கட்டு, காக்கையன்குளம், கல்மடு கட்டம்-2, இரணை இலுப்பைக்குளம் ஆகிய கிராமங்களில் வசிக்கும் மக்கள் தங்களுடைய தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு 70 கி.மீ மேலதிகமாக பயணம் செய்து மாந்தை மேற்கு பிரதேச சபைக்கு செல்ல வேண்டியுள்ளதெனவும்;

அவர்அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், சம்பந்தப்பட்ட 04 பிரதேச சபைகளை நிறுவுவதற்கு இற்றைவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) அதற்காக எடுக்கப்படும் காலம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

325/2020

கௌரவ புத்திக பத்திறண,— வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கைக்குத் தனித்துவமான ஊர்வன மற்றும் பாம்பு வகைகளின் எண்ணிக்கை எத்தனை;

(ii) அவற்றுக்கு மத்தியில் அழிவடையும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதன் காரணமாக சிவப்பு தரவுப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஊர்வன மற்றும் பாம்பு வகைகள் யாவை;

(iii) இன்றளவில் அழிவடைந்துள்ள இலங்கைக்குத் தனித்துவமான ஊர்வன மற்றும் பாம்பு வகைகள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இலங்கைக்குத் தனித்துவமான ஊர்வன மற்றும் பாம்பு வகைகள் தொடர்பாக அண்மையில் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், அது மேற்கொள்ளப்பட்ட திகதி யாது;

(iii) இன்றேல், அத்தகைய ஆய்வு நடத்தப்படுமா;

என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இலங்கைக்குத் தனித்துவமான ஊர்வன மற்றும் பாம்பு வகைகளைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை;

(iii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை;

என்பதை அவர் மேலதிகமாகவும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

326/2020

கௌரவ புத்திக பத்திறண,— வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்குத் தனித்துவமான ஈரூடக உயிரின வகைகளின் எண்ணிக்கை எத்தனை;

(ii) அவற்றுக்கு மத்தியில் அழிவடையும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதன் காரணமாக சிவப்பு தரவுப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஈரூடக உயிரின வகைகள் யாவை;

(iii) இன்றளவில் அழிவடைந்துள்ள இலங்கைக்குத் தனித்துவமான ஈரூடக உயிரின வகைகள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இலங்கைக்குத் தனித்துவமான ஈரூடக உயிரினங்கள் தொடர்பாக அண்மையில் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், அது மேற்கொள்ளப்பட்ட திகதி யாது;

(iii) இன்றேல், அத்தகைய ஆய்வு நடத்தப்படுமா;

என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இலங்கைக்குத் தனித்துவமான ஈரூடக உயிரினங்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை;

(iii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை;

என்பதை அவர் மேலதிகமாகவும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

579/2020

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) வட மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினால் சுவீகரித்துக்கொள்ளப்பட்டுள்ள காணிகளின் பரப்பளவு தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(ii) அந்த அளவானது வட மாகாணத்திற்கான மொத்தக் காணிப் பரப்பளவின் எத்தனை சதவீதம் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இவ்வகையில் காணிகள் சுவீகரித்துக்கொள்ளப்படும்போது தனியார் காணிகள், விவசாய வாவிகள், விவசாயக் காணிகள் மற்றும் கால் நடைகளுக்கான புற்தரைகளும் சுவீகரித்துக்கொள்ளப்பட்டுள்ளதோடு அது மக்களின் வாழ்வாதாரத்தின் மீது மட்டுமன்றி சகவாழ்வின் மீதும் பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(இ) மேற்படி காணிகள் சுவீகரித்துக்கொள்ளப்படும்போது மாவட்டச் செயலாளர், பிரதேச செயலாளர் மற்றும் மாகாண காணி ஆணையாளர் ஆகியோரின் ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

533/2020

கௌரவ ரோஹண பண்டார,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ள அரசாங்கத்திற்குச் சொந்தமான மருந்தகங்களின் (ஒசுசல) எண்ணிக்கை எத்தனை;

(ii) குறிப்பிட்ட மருந்தகங்கள் அமைந்துள்ள இடங்களின் முகவரிகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்குத் அறிவிப்பாரா?

(ஆ) அரச மருந்தகக் கிளை வலையமைப்பினை அநுராதபுர மாவட்டத்தில் மேலும் விஸ்தரிப்பதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்குத் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

594/2020

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கான அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி மருத்துவமனையில் தற்போதுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி மருத்துவமனையில் இன்றளவில் நிலவும் பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மருத்துவமனையில் கடமையில் ஈடுபட்டுள்ள மருத்துவர்கள் மற்றும் தாதியர்களின் எண்ணிக்கை இவர்களின் தொடர்பாடல் மொழிக்கமைய வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு திடீர் விபத்துப் பிரிவொன்றை நிறுவுவதற்கு 2019.02.15 ஆம் திகதியன்று அடிக்கல் நாட்டப்பட்டதென்பதையும்;

(ii) மேற்படி பிரிவை நிறுவுவதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி நிர்மாணப் பணிகள் இதுவரை ஆரம்பிக்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) நிதி ஒதுக்கப்படவிலலையெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(v) மேற்படி மருத்துவமனையில் திடீர் விபத்துப் பிரிவு ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

621/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை மருத்துவச் சபையில் தற்போது காணப்படுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பதவிப் பெயரின் பிரகாரம் வெவ்வேறாக எத்தனை;

(ii) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்காக அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

622 /2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மருத்துவச் சபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட மருத்துவர்களின் மொத்த எண்ணிக்கை எத்தனை;

(ii) மேற் குறிப்பிட்ட மருத்துவர்கள் மத்தியில் தகைமைகளைக் கொண்டிராத மருத்துவர்களும் உள்ளனர் என்பதை அறிவாரா;

(iii) ஆமெனில், அது தொடர்பாக அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

170/2020

கௌரவ எஸ். எம். மரிக்கார்,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) மாலம்பே தொடக்கம் கொழும்பு - கோட்டை வரை இலகு மின்சார புகையிரதக் கருத்திட்டமொன்றைச் செயற்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டிருந்ததென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்திற்கு மண் பரிசோதனை மற்றும் காணிகளைச் சுவீகரிப்பதற்கு ஏற்புடைய நில அளவை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டம் தொடர்ந்தும் செயற்படுத்தப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கருத்திட்டம் தொடர்பாக மேற்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

245/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பஞ்சின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி பஞ்சு எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iv) மேற்படி பஞ்சை இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு பஞ்சை இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

273/2020

கௌரவ புத்திக பத்திறண,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச நிறுவனங்களில் பாவனையின் பின்னர் அகற்றப்பட்டுள்ள வாகனங்கள் பெருமளவில் காணப்படுகின்றன என்பதையும்;

(ii) அவை துருப்பிடித்து வருகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அரச நிறுவனங்களிலிருந்து பாவனையின் பின்னர் அகற்றப்பட்டுள்ள வாகனங்களின் இன்றைய பெறுமதி எவ்வளவென்பதையும்;

(ii) அவ்வாகனங்கள் தொடர்பில் தொகைக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அக்கணிப்பீடு மேற்கொள்ளப்பட்ட திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) (i) அரச நிறுவனங்களிலிருந்து பாவனையின் பின்னர் அகற்றப்படும் வாகனங்களை அப்புறப்படுத்துவதற்கான முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

416/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ள எதனோல் லீற்றர்களின் அளவு;

(ii) இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள எதனோல் லீற்றர்களின் அளவு;

(iii) இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள எதனோல் ஒரு லீற்றர் விற்பனை செய்யப்பட்டுள்ள விலை;

யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2020 ஆம் ஆண்டில் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள எதனோல் லீற்றர்களின் அளவு யாது;

(ii) 2020 ஆம் ஆண்டில் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள எதனோல் ஒரு லீற்றர் விற்பனை செய்யப்பட்டுள்ள விலை எவ்வளவு;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) 2018 - 2019 ஆம் ஆண்டுகளிலும் 2020 ஆம் ஆண்டிலும் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள எதனோலின் ஒரு லீற்றர் விற்பனை செய்யப்பட்டுள்ள விலைகளுக்கு இடையில் வேறுபாடு உள்ளதா;

(ii) ஆமெனில், அந்த வேறுபாடு யாது;

என்பதை அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1277/2020

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை அரசாங்கத்தினால் வெளிநாடுகள், வெளிநாட்டு முகவர் நிறுவனங்கள் மற்றும் வங்கிகளிடமிருந்து 2015.01.01ஆம் திகதி தொடக்கம் 2020.10.01 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கடன் மற்றும் நிதியுதவி என்பவற்றின் அளவு தனத்தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி கடன் மற்றும் நிதியுதவிகள் பெற்றுக்கொள்ளப்பட்டமைக்கான நோக்கம், கருத்திட்டம், ஆண்டு, நாடு மற்றும் தேவை என்பன தனித்தனியே யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி கடன் மற்றும் நிதியுதவிகளானவை அவற்றைப் பெற்றுக்கொண்ட நோக்கத்திற்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளன என்பது தொடர்பில் உத்தரவாதம் அளிக்கின்றாரா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

854/2020

கௌரவ அஜித் ராஜபக்ஷ,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கொழும்பு 05, கிரிமண்டல மாவத்தை எனும் முகவரியில் பேணிச் செல்லப்படும் வ/ப ஆசிரி சத்திர சிகிச்சை வைத்தியசாலை அமைந்துள்ள காணியானது அவ்வைத்தியசாலையை நிர்மாணிப்பதற்கு முன்னர் அரசாங்கத்திற்குச் சொந்தமானதாக இருந்ததென்தை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி காணி, மேற்குறிப்பிடப்பட்ட வைத்தியசாலையை நிர்மாணிப்பதற்காக ஒப்படைக்கப்பட்ட அடிப்படை யாதென்பதையும்;

(ii) மேற்குறிப்பிடப்பட்ட வைத்தியசாலையை நிர்மாணிப்பதற்காக இக்காணி ஒப்படைக்கப்பட்டபோது, ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை இச்சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1801/2021

கௌரவ றோஹண திசாநாயக்க,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளதான அரச காணிகளுக்காக வழங்கப்பட்டுள்ள காணி உறுதி வகைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) அத்தகைய உறுதி வகைகளில், பின் உரித்தாளரைக் குறிப்பிட்டு வழங்கப்படும் உறுதி வகைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) அத்தகைய உறுதிகளுக்கு உட்பட்ட வகையில் வழங்கப்பட்ட காணிகளை, குடும்பத்தின் ஏனைய அங்கத்தவர்களிடையே சட்ட ரீதியாக எளிமையாகப் பிரிக்கும் வழிமுறையொன்றைத் தயாரிக்க அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

604/2020

கௌரவ இஷாக் ரஹுமான் ,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மஹாஇலுப்பல்லமவில் அமைந்துள்ள களப் பயிர்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்துக்குச் சொந்தமான முழு நிரப்பரப்பின் அளவு;

(ii) அவற்றில் விதை உற்பத்தி நிலையத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலப்பரப்பின் அளவு;

(iii) கள ஆராய்ச்சி நிலையத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலப்பரப்பின் அளவு;

(iv) பண்ணை பொறித்தொகுதி நிலையத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலப்பரப்பின் அளவு;

(v) பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படாத நிலப் பரப்பின் அளவு;

ஏக்கர்களில் எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படாத நிலப்பரப்பினை பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

38/2020

கௌரவ ஹேஷா விதானகே,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 1983 ஆம் ஆண்டில் உள்நாட்டு யுத்த நிலைமை ஆரம்பிக்க முன்னர், வடக்கு மாகாணத்தில் காணப்பட்ட இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குரிய எரிபொருள் நிரப்பு நிலையங்களின் —

(i) எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) அமைக்கப்பட்டிருந்த இடங்களின் முகவரிகள் யாவையென்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களின் உரிமையாளர்களது பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) அவர்களது முகவரிகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்குறிப்பிட்ட (அ)(iii) இல் குறிப்பிட்ட உரிமையாளர்களுள், வடக்கு மாகாணத்தில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்த காலப்பகுதியினுள் கொலை செய்யப்பட்டு, காணாமல் போனதன் காரணமாக அல்லது இறப்பின் காரணமாக குறிப்பிட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களின் உரிமையானது மாற்றமடைந்ததா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்குறிப்பிட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களில் புதிதாக உரித்தினைப் பெற்றுக்கொண்ட உரிமையாளர்களின் —

(i) எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) அவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) முகவரிகள் யாவை என்பதையும்;

(iv) பின் உரிமையாளர்களுக்கு, முன் உரிமையாளர்களது உறவு முறைமையொன்று காணப்படுமாயின் குறித்த உறவு முறை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு மேலும் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1019/2020

கௌரவ யூ. கே. சுமித் உடுகும்புர,— சுற்றுலாத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்தல ராஜபக்ச சர்வதேச விமான நிலையம் இலங்கைக்கு பெரும் சொத்தாக உள்ளதென்பதையும்;

(ii) கடந்த ஆட்சிக் காலத்தில் அதில் நெல் களஞ்சியப்படுத்தப்பட்டதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட விமான நிலையத்தில் நெல் களஞ்சியப்படுத்தும் சாத்தியம் உள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி விமான நிலையத்தில் நெல் களஞ்சியப்படுத்தப்பட்ட இடம் யாதென்பதையும்;

(iii) களஞ்சியப்படுத்தப்பட்ட நெல்லின் அளவு எவ்வளவென்பதையும்;

(iv) இதற்காக ஆலோசனை வழங்கிய ஆட்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) நெல் களஞ்சியப்படுத்தப்பட்ட பின்னர் அவ்வளாகத்தை மீள புனரமைப்பதற்கு செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(ii) அதற்கு பொறுப்புக்கூற வேண்டிய ஆட்களிடமிருந்து அப்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இன்றேல், எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) சர்வதேச விமான நிலையமொன்றில் நெல் களஞ்சியப்படுத்தியதன் மூலம் இலங்கை சர்வதேச ரீதியாக அபகீர்த்திக்கு உள்ளானதா என்பதையும் அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

202/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள விளையாட்டுக் கழகங்கள் மற்றும் அவற்றின் பெயர்கள்;

(ii) மேற்படி கழகங்களுக்கு மத்தியில் உரிய முறையில் தேர்தல்களை நடாத்தியுள்ள விளையாட்டுக் கழகங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள்;

(iii) தேர்தல்களை நடாத்துவதில் தடை ஏற்பட்டுள்ள விளையாட்டுக் கழங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள்;

(iv) தேர்தல்களை நடாத்துவதில் தடை ஏற்பட்டுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கான தேர்தல்களை நடாத்துவதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்;

யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

258/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தினால் நடாத்தப்படுகின்ற விளையாட்டுப் பாடநெறிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி பாடநெறிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பாடநெறியையும் தற்போது பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை தனித்தனியே யாது என்பதையும்;

(iv) தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தினால் நடாத்தப்படுகின்ற விளையாட்டுப் பாடநெறிகளின் தரத்தை மேம்படுத்த அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

718/2020

கௌரவ சாந்த பண்டார,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்வது விளையாட்டு நடவடிக்கைகளுக்கு வசதியாக அமையும் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இலங்கையில் தடகள விளையாட்டுக்கென தற்போது காணப்படுகின்ற சர்வதேச விளையாட்டு மைதானங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மாவட்ட மட்டத்தில் முழுமையான வசதிகளுடன் கூடிய விளையாட்டு மைதானங்களை அமைப்பதற்கான முறையொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அதற்காக நிதி ஏற்பாடுகளை ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

612/2020

கௌரவ இஷாக் ரஹுமான்,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கெகிராவ பொலிஸ் நிலையமானது சுமார் 49 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்வாங்குவதுடன் அங்கு சுமார் 200 பொலிஸ் உத்தியோகத்தர்கள் சேவையாற்றுகின்றனர் என்பதையும்;

(ii) மேற்படி பொலிஸ் நிலையம் இயங்கும் கட்டிடமானது சுமார் 50 வருட காலம் பழைமையானது என்பதையும்;

(iii) மேற்படி பொலிஸ் நிலையத்தில் மிகவும் சேதமடைந்த நிலையில் காணப்படும் பாளையங்களைப் பயன்படுத்தும் உத்தியோகத்தர்கள் மழைக் காலங்களில் மிகவும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) கெகிராவ பொலிஸ் நிலையத்தில் காணப்படும் குறைபாடுகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

733/2020

கௌரவ இஷாக் ரஹுமான்,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் பொலிஸ் சார்ஜண்ட் பதவிக்கு கீழுள்ள பதவிகளில் பணிபுரியும் பட்டதாரி பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எத்தனை;

(ii) கல்வித் தகைமைகளுக்கு உகந்த பதவியுயர்வுகள் கிடைக்கப்படாமை காரணமாக மேற்படி உத்தியோகத்தர்கள் பாரிய மன விரக்திக்கும் மன அழுத்தத்திற்கும் உள்ளாகியுள்ளனர் என்பதை ஏற்றுக்கொள்வாரா;

(iii) ஆமெனில், மேற்படி உத்தியோகத்தர்களின் கல்வித் தகைமைகளுக்கு உகந்த பதவி உயர்வுகளை வழங்கி அவர்களிடமிருந்து பயனுள்ள சேவையினை பொலிஸ் திணைக்களத்திற்குப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா;

(iv) மேற்படி உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வுகளை வழங்குவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

ஊழியர் சகாய நிதியம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

தொழில் அமைச்சர்,— ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் 8 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 46 ஆம் பிரிவின் கீழ் தொழில் அமைச்சரால் ஆக்கப்பட்டதும், 2021.09.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நீதி அமைச்சர்,— குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 214 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 840 ஆம் பிரிவின் கீழ் நீதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2021 யூலை 02 ஆம் திகதிய, 2234/67 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.09.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2021, ஒக்டோபர் 05, செவ்வாய்க்கிழமை)**

816/2020

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வட மாகாணத்தில் அமைந்துள்ள போதனா வைத்தியசாலைகள், மாவட்ட வைத்தியசாலைகள், பிரதேச /ஆதார வைத்தியசாலைகள் மற்றும் சுற்றயல் வைத்தியசாலைகளின் எண்ணிக்கை;

(ii) மேற்படி ஒவ்வொரு வைத்தியசாலையிலும் நாளாந்தம் சிகிச்சை பெறும் வெளி நோயாளர்களின் எண்ணிக்கை;

(iii) மேற்படி ஒவ்வொரு வைத்தியசாலைக்குமென அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதி;

(iv) மேற்படி ஒவ்வொரு வைத்தியசாலையிலும் இன்றளவில் நிலவும் பணியாளர் வெற்றிடங்களின் எண்ணிக்கை;

எத்தனை என்பதை வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி (அ) (iv) இல் குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர் வெற்றிடங்கள் எப்போது நிரப்பப்படும் என்பதை தெரிவிப்பாரா?

(இ) (i) மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு வைத்தியசாலையிலும் நாளாந்தம் அனுமதிக்கப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு வைத்தியசாலையிலும் உள்ள கட்டில்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) அக்கட்டில்களின் எண்ணிக்கை போதுமானதா என்பதையும்;

(iv) மேற்படி வைத்தியசாலைகளில் இன்றளவில் நிலவும் பௌதீக வளப் பற்றாக்குறைக்கான தீர்வு எப்போது வழங்கப்படும் என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2490/2021

கௌரவ கே. சுஜித் சஞ்சய பெரேரா,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) எட்டியாந்தோட்டை பிரதேசத்தில் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான நாகஸ்தென்ன தோட்டம் என்ற பெயரில் ஒரு தோட்டம் உள்ளதென்பதையும்;

(ii) அத்தோட்டத்தில் 1000 கும் மேற்பட்ட ஏக்கர்களை சில தனியார் வியாபாரி களுக்கு விற்பனை செய்வதற்கு அல்லது குத்தகைக்கு வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், அதற்காகப் பின்பற்றப்படும் நடவடிக்கைமுறை யாது;

(ii) எட்டியாந்தோட்டை பிரதேச மக்களுக்கு ஒரு சொத்தாக அமைந்துள்ள மேற்படி தோட்டத்தை மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் கீழ் வைத்துக்கொண்டு அபிவிருத்தி செய்வதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2021, ஒக்டோபர் 08, வெள்ளிக்கிழமை)**

1902/2021

கௌரவ அநுர திசாநாயக்க,— வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) வனப்பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் காணப்படும் ஒதுக்கங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு ஒதுக்கமும் அவ்வாறு ஒதுக்கமாக பிரகடனப்படுத்தப்பட்ட ஒவ்வொரு வர்த்தமானி அறிவித்தலினதும் இலக்கம் மற்றும் திகதி என்பன வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி வர்த்தமானி அறிவித்தல்களை சபாபீடத்திற்குச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) யாதேனுமொரு பிரதேசம், ஒதுக்கமாக பிரகடனப்படுத்தப்பட்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்து வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்கள் உள்ளனவா என்பதையும்;

(v) ஆமெனில், அந்த ஒவ்வொரு வர்த்தமானி அறிவித்தலினதும் இலக்கம் மற்றும் திகதி என்பன வெவ்வேறாக யாவை என்பதையும்;

(vi) மேற்படி வர்த்தமானி அறிவித்தல்களை சபாபீடத்திற்குச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(vii) மேற்படி திணைக்களத்தின் கீழ் எதிர்வரும் காலத்தில் ஒதுக்கங்களாக அல்லது முகாமைத்துவப் பிரதேசங்களாக பிரகடனப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள பிரதேசங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1903/2021

கௌரவ அநுர திசாநாயக்க,— வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) வனசீவராசிகள் திணைக்களத்தின் கீழ் காணப்படும் ஒதுக்கங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு ஒதுக்கமும் அவ்வாறு ஒதுக்கமாக பிரகடனப்படுத்தப்பட்ட ஒவ்வொரு வர்த்தமானி அறிவித்தலினதும் இலக்கம் மற்றும் திகதி என்பன வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி வர்த்தமானி அறிவித்தல்களை சபாபீடத்திற்குச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) யாதேனுமொரு பிரதேசம், ஒதுக்கமாக பிரகடனப்படுத்தப்பட்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்து வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்கள் உள்ளனவா என்பதையும்;

(v) ஆமெனில், அந்த ஒவ்வொரு வர்த்தமானி அறிவித்தலினதும் இலக்கம் மற்றும் திகதி என்பன வெவ்வேறாக யாவை என்பதையும்;

(vi) மேற்படி வர்த்தமானி அறிவித்தல்களை சபாபீடத்திற்குச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(vii) மேற்படி திணைக்களத்தின் கீழ் எதிர்வரும் காலத்தில் ஒதுக்கங்களாக அல்லது முகாமைத்துவப் பிரதேசங்களாக பிரகடனப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள பிரதேசங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2110/2021

கௌரவ ரஊப் ஹகீம்,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) "கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணி முகாமைத்துவ நடவடிக்கைகளை முறைப்படுத்தல்" எனும் தலைப்பிலான 11/0737/533/015 ஆம் இலக்க மற்றும் 2011.05.04 ஆம் திகதிய அமைச்சரவை கொள்கைத் தீர்மானத்தினை நடைமுறைப்படுத்தும் வகையில் "வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் அரச காணிகள் தொடர்பான பிணக்குகளைத் தீர்க்கும் துரித நிகழ்ச்சித் திட்டம்" எனும் தலைப்பில் காணி ஆணையாளர் நாயகத்தினால் 2013/01 ஆம் இலக்க மற்றும் 2013.01.31 ஆம் திகதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி சுற்றறிக்கையின் 2.2.2.1, 2.2.3.4, 2.2.3.5 மற்றும் 3.5 ஆம் பிரிவுகளின் பிரகாரம் அம்பாறை மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நிகழ்ச்சித்திட்டங்களின்போது வழங்கப்பட்ட தீர்வுகள் யாவை என்பதையும்;

(iv) பிணக்குகளுக்கான தீர்வுகள் வழங்கப்பட்ட ஒவ்வொரு நபரின் பெயர் மற்றும் முகவரி ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவு ரீதியாக வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2111/2021

கௌரவ ரஊப் ஹகீம்,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) "கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணி முகாமைத்துவ நடவடிக்கைகளை முறைப்படுத்தல்" எனும் தலைப்பிலான 11/0737/533/015 ஆம் இலக்க மற்றும் 2011.05.04 ஆம் திகதிய அமைச்சரவை கொள்கைத் தீர்மானத்தினை நடைமுறைப்படுத்தும் வகையில் "வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் அரச காணிகள் தொடர்பான பிணக்குகளைத் தீர்க்கும் துரித நிகழ்ச்சித் திட்டம்" எனும் தலைப்பில் காணி ஆணையாளர் நாயகத்தினால் 2013/01 ஆம் இலக்க மற்றும் 2013.01.31 ஆம் திகதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி சுற்றறிக்கையின் 2.2.2.1, 2.2.3.4, 2.2.3.5 மற்றும் 3.5 ஆம் பிரிவுகளின் பிரகாரம் மன்னார் மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நிகழ்ச்சித்திட்டங்களின்போது வழங்கப்பட்ட தீர்வுகள் யாவை என்பதையும்;

(iv) பிணக்குகளுக்கான தீர்வுகள் வழங்கப்பட்ட ஒவ்வொரு நபரின் பெயர் மற்றும் முகவரி ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவு ரீதியாக வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2112/2021

கௌரவ ரஊப் ஹகீம்,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) "கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணி முகாமைத்துவ நடவடிக்கைகளை முறைப்படுத்தல்" எனும் தலைப்பிலான 11/0737/533/015 ஆம் இலக்க மற்றும் 2011.05.04 ஆம் திகதிய அமைச்சரவை கொள்கைத் தீர்மானத்தினை நடைமுறைப்படுத்தும் வகையில் "வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் அரச காணிகள் தொடர்பான பிணக்குகளைத் தீர்க்கும் துரித நிகழ்ச்சித் திட்டம்" எனும் தலைப்பில் காணி ஆணையாளர் நாயகத்தினால் 2013/01 ஆம் இலக்க மற்றும் 2013.01.31 ஆம் திகதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி சுற்றறிக்கையின் 2.2.2.1, 2.2.3.4, 2.2.3.5 மற்றும் 3.5 ஆம் பிரிவுகளின் பிரகாரம் திருகோணமலை மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நிகழ்ச்சித்திட்டங்களின்போது வழங்கப்பட்ட தீர்வுகள் யாவை என்பதையும்;

(iv) பிணக்குகளுக்கான தீர்வுகள் வழங்கப்பட்ட ஒவ்வொரு நபரின் பெயர் மற்றும் முகவரி ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவு ரீதியாக வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2113/2021

கௌரவ ரஊப் ஹகீம்,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) "கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணி முகாமைத்துவ நடவடிக்கைகளை முறைப்படுத்தல்" எனும் தலைப்பிலான 11/0737/533/015 ஆம் இலக்க மற்றும் 2011.05.04 ஆம் திகதிய அமைச்சரவை கொள்கைத் தீர்மானத்தினை நடைமுறைப்படுத்தும் வகையில் "வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் அரச காணிகள் தொடர்பான பிணக்குகளைத் தீர்க்கும் துரித நிகழ்ச்சித் திட்டம்" எனும் தலைப்பில் காணி ஆணையாளர் நாயகத்தினால் 2013/01 ஆம் இலக்க மற்றும் 2013.01.31 ஆம் திகதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி சுற்றறிக்கையின் 2.2.2.1, 2.2.3.4, 2.2.3.5 மற்றும் 3.5 ஆம் பிரிவுகளின் பிரகாரம் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நிகழ்ச்சித்திட்டங்களின்போது வழங்கப்பட்ட தீர்வுகள் யாவை என்பதையும்;

(iv) பிணக்குகளுக்கான தீர்வுகள் வழங்கப்பட்ட ஒவ்வொரு நபரின் பெயர் மற்றும் முகவரி ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவு ரீதியாக வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2114/2021

கௌரவ ரஊப் ஹகீம்,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) "கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணி முகாமைத்துவ நடவடிக்கைகளை முறைப்படுத்தல்" எனும் தலைப்பிலான 11/0737/533/015 ஆம் இலக்க மற்றும் 2011.05.04 ஆம் திகதிய அமைச்சரவை கொள்கைத் தீர்மானத்தினை நடைமுறைப்படுத்தும் வகையில் "வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் அரச காணிகள் தொடர்பான பிணக்குகளைத் தீர்க்கும் துரித நிகழ்ச்சித் திட்டம்" எனும் தலைப்பில் காணி ஆணையாளர் நாயகத்தினால் 2013/01 ஆம் இலக்க மற்றும் 2013.01.31 ஆம் திகதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி சுற்றறிக்கையின் 2.2.2.1, 2.2.3.4, 2.2.3.5 மற்றும் 3.5 ஆம் பிரிவுகளின் பிரகாரம் வவுனியா மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நிகழ்ச்சித்திட்டங்களின்போது வழங்கப்பட்ட தீர்வுகள் யாவை என்பதையும்;

(iv) பிணக்குகளுக்கான தீர்வுகள் வழங்கப்பட்ட ஒவ்வொரு நபரின் பெயர் மற்றும் முகவரி ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவு ரீதியாக வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2115/2021

கௌரவ ரஊப் ஹகீம்,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) "கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணி முகாமைத்துவ நடவடிக்கைகளை முறைப்படுத்தல்" எனும் தலைப்பிலான 11/0737/533/015 ஆம் இலக்க மற்றும் 2011.05.04 ஆம் திகதிய அமைச்சரவை கொள்கைத் தீர்மானத்தினை நடைமுறைப்படுத்தும் வகையில் "வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் அரச காணிகள் தொடர்பான பிணக்குகளைத் தீர்க்கும் துரித நிகழ்ச்சித் திட்டம்" எனும் தலைப்பில் காணி ஆணையாளர் நாயகத்தினால் 2013/01 ஆம் இலக்க மற்றும் 2013.01.31 ஆம் திகதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி சுற்றறிக்கையின் 2.2.2.1, 2.2.3.4, 2.2.3.5 மற்றும் 3.5 ஆம் பிரிவுகளின் பிரகாரம் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நிகழ்ச்சித்திட்டங்களின்போது வழங்கப்பட்ட தீர்வுகள் யாவை என்பதையும்;

(iv) பிணக்குகளுக்கான தீர்வுகள் வழங்கப்பட்ட ஒவ்வொரு நபரின் பெயர் மற்றும் முகவரி ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவு ரீதியாக வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2116/2021

கௌரவ ரஊப் ஹகீம்,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) "கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணி முகாமைத்துவ நடவடிக்கைகளை முறைப்படுத்தல்" எனும் தலைப்பிலான 11/0737/533/015 ஆம் இலக்க மற்றும் 2011.05.04 ஆம் திகதிய அமைச்சரவை கொள்கைத் தீர்மானத்தினை நடைமுறைப்படுத்தும் வகையில் "வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் அரச காணிகள் தொடர்பான பிணக்குகளைத் தீர்க்கும் துரித நிகழ்ச்சித் திட்டம்" எனும் தலைப்பில் காணி ஆணையாளர் நாயகத்தினால் 2013/01 ஆம் இலக்க மற்றும் 2013.01.31 ஆம் திகதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி சுற்றறிக்கையின் 2.2.2.1, 2.2.3.4, 2.2.3.5 மற்றும் 3.5 ஆம் பிரிவுகளின் பிரகாரம் யாழ்ப்பாணம் மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நிகழ்ச்சித்திட்டங்களின்போது வழங்கப்பட்ட தீர்வுகள் யாவை என்பதையும்;

(iv) பிணக்குகளுக்கான தீர்வுகள் வழங்கப்பட்ட ஒவ்வொரு நபரின் பெயர் மற்றும் முகவரி ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவு ரீதியாக வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?